பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 12 2025** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறப்பாக செயல்பட்ட விஞ்ஞானிகளுக்கு தேசிய அறிவியல் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

2. இலங்கையில் **Ditwah** புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளுக்கு இந்தியா உதவிடும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு பியூஷ் கோயல், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியை இன்று சந்தித்து பேசினார்.

4. தமிழகத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, அடுத்த மாதம் 6-ஆம் தேதிக்குள் விலையில்லா வேட்டி-சேலை வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி கூறியுள்ளார்.

5. மகாராஷ்ட்ரா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** — அங்கிதா ரெய்னா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறப்பாக செயல்பட்ட விஞ்ஞானிகளுக்கு தேசிய அறிவியல் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், விக்யான் ரத்னா, விக்யான் ஸ்ரீ, விக்யான் யுவசாந்தி, விக்யான் குழு ஆகிய நான்கு பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன.

அறிவியல் துறையில் உயரிய விருதான விக்யான் ரத்னா, பத்ம விபூஷன் பெற்ற மறைந்த பேராசிரியர் ஜெயந்த் விஷ்ணு நர்லிக்கருக்கு இறப்புக்கு பிந்தைய விருதாக வழங்கப்பட்டது.

எட்டு பேருக்கு விக்யான் ஸ்ரீ விருதுகளையும், 14 இளம் விஞ்ஞானிகளுக்கு விக்யான் யுவா விருதுகளையும் குடியரசுத் தலைவர் வழங்கினார்.

விக்யான் குழு விருது CSIR-ன் அரோமா இயக்க குழுவுக்கு வழங்கப்பட்டது.

<<<<<<>>>>>

Ditwah புயலால் பாதிக்கப்பட்ட இலங்கையில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், இலங்கைக்கான மறுசீரமைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவது குறித்தும், கூடுதலான நிவாரணம் வழங்குவது குறித்தும் அந்நாட்டு அமைச்சர்களுடன் இன்று பேச்சு நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

இன்று பிற்பகல் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் இலங்கை அமைச்சர்கள் விஜிதா ஹெரத், நலிந்தா ஜெ, அனில் ஜெயந்தா, ரூவன் ரணசிங்கே ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

பின்னர், இந்திய வர்த்தக தொழில்துறையினரை சந்தித்து பேசிய திரு ஜெய்சங்கர், **Ditwah** புயலின்போது நிவாரண உதவிகளை வழங்கிய தொழில்துறையினருக்கு தமது பாராட்டுகளை தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்தியா மேற்கொள்ளவிருக்கும் மறுசீரமைப்பு கட்டுமானப்பணிகள் குறித்து இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு சஜித் பிரேமதாசாவுடன், திரு ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

<<<<<<>>>>>

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு பியூஷ் கோயல், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியை இன்று சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பில் மத்திய அமைச்சர் திரு அர்ஜூன்ராம் மெக்வால், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இந்த சந்திப்பு குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த தமிழக பிஜேபி தலைவர் திரு நயினார் நாகேந்திரன், மரியாதை நிமித்தமாக இந்த சந்திப்பு நிகழ்ந்ததாக கூறினார்.

இந்த சந்திப்பின்போது வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தொகுதி பங்கீடு குறித்து எந்த பேச்சுக்களும் இடம்பெறவில்லை என்று கூறினார்.

அஇஅதிமுக-வின் உட்கட்சி விவகாரங்கள் குறித்தோ, அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் இணைப்பது குறித்தோ எந்த பேச்சுக்களும் நடைபெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் ஆளும் திமுக மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்றும், திமுக அரசை அகற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தாங்கள் இணைந்து செயல்படுவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, அடுத்த மாதம் 6-ஆம் தேதிக்குள் நியாயவிலைக்கடைகள் மூலமாக விலையில்லா

வேட்டி-சேலை வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் அனைவருக்கும் பாதுகாப்பான வீடுகள் கிடைக்கும் வகையில், பல திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக அமைச்சர் திரு கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்டுள்ள 969 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை அவர் திறந்துவைத்து பேசினார்.

இந்த குடியிருப்புப் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு, அங்கன்வாடி மையம், சுகாதார மையம், சமுதாயக்கூடம் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் அமைத்து தரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மாநிலத்தில் ஒரு லட்சத்து 46 ஆயிரம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருவதாகவும் திரு கோவி செழியன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க திட்டம் குறித்து விவசாயிகளுக்கு சேலத்தில் இன்று செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

சேலம் வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில், மாவட்டத்தில் உள்ள 20 ஒன்றியங்களை சேர்ந்த விவசாயிகள் இதில் கலந்துகொண்டனர்.

125 வேலை நாட்களாக உயர்த்தப்பட்ட இத்திட்டத்தின் பயன்கள் குறித்து இன்று விளக்கம் அளிக்கப்பட்டதாக சேலம் வேளாண் அறிவியல் நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி ஜெகதாம்பாள் தெரிவித்தார்.

***(Sound Byte — ஜெகதாம்பாள் — 27 Sec.)***

ஊரக வேலைவாய்ப்பை **Viksit Bharat G Ram G** திட்டத்தின்மூலம் 125 நாட்களாக உயர்த்தியிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

***(Sound Byte — விவசாயிகள் - 53 Sec.)***

<<<<<>>>>>

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதையடுத்து, அரசியல் கட்சிகள் சார்பில் 2 லட்சத்து 64 ஆயிரத்து 191 வாக்குச்சாவடி முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளால் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் படிவம்-6 மற்றும் ஆட்சேபனை படிவம்-7 ஆகியவற்றை பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் இல்லாமல் பொதுவான புகார்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பான மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

இந்தியா — ஜப்பான் மாணவர்கள் பரிமாற்ற திட்டத்தின்கீழ், அரியலூர் மாவட்டத்தில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள் தொல்லுயிர் பூங்கா மற்றும் அருங்காட்சியகத்தை ஜப்பான் மாணவர்கள் இன்று கள ஆய்வு மேற்கொண்டனர்.

---------------

சிவகங்கை மாவட்டத்தில் ஊட்டச்சத்து வேளாண் இயக்கத் திட்டத்தின்கீழ், 100 சதவீத மானியத்தில் காய்கறி மற்றும் கீரை விதை தொகுப்புகள் வழங்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

-----------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் உலக எயிட்ஸ் தினம் 2025-ஐ முன்னிட்டு சுகாதார நலப்பணிகள் இணை இயக்குனர் மாலினி தலைமையில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

----------------

தஞ்சாவூர் மாவட்டம் அயோத்திப்பட்டியில் பல்வேறு மாவட்டங்களில் பறிமுதல் செய்யப்பட்ட 2 ஆயிரத்து 106 கிலோ போதைப்பொருட்கள் தமிழக நுண்ணறிவு பிரிவு ஐ ஜி செந்தில்குமாரி முன்னிலையில் இன்று தீயிலிட்டு அழிக்கப்பட்டது.

------------

திண்டுக்கல் மாவட்டம் பாலாறு, பொருந்தலாறு அணையிலிருந்து நாளை முதல் **70** நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம் **6** ஆயிரத்து **168** ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மகாராஷ்ட்ரா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** — அங்கிதா ரெய்னா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சோலாப்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், **6-2, 7-6** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Pooja Ingale** — **Madhurima Sawant** இணையை வென்றது.

**Vaidehi Chaudhari** — **Shrivalli Rashmikaa** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>**